Reg'sered as a News Paper in Ceylon ★ விலை: சதம் 15

ஜோன்ஸன்
அவுட்போட் மோட்டர்
யந்திர உதிரிப்பாகங்கள்
(6-H. P. — 20-H. P.)
எம்மிடம்
சனிக்கிழமை (29-5-71) தொடக்கம்
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
யாழ்ப்பாணம்வீதி, வல்வெட்டித்துறை.
போன்: 34

# ஈழநாடு

EELA NADU
National Tamil Daily
தேசிய தினசரி
தபால் பெட்டி எண். 49 போன்: 389

உயர்ந்த சேவை
சிறந்த இடம்

கொழும்பு ஒப்ரிக்கல்
95, ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கி அருகாமை)

மலர் 13 | வைகாசி 14 | ரபி:ஆகி 3 | (28—5—71) | வெள்ளிக்கிழமை | இதழ் 105

## 'அவசரகாலச் சட்டத்தின்கீழ் நிறைவேற்றும்
# அரசியலமைப்புச் சட்டத்தை தமிழ்மக்கள் ஏற்கார்'

## செனட் சபையில் 'திரு'

கொழும்பு. வியா
அவசரகாலச் சட்டத்தின்கீழ் அவசர அவசரமாக அரசியல் நிர்ணய சபையில் நிறைவேற்றப்படும் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை தமிழ்பேசும் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று செனட்டர் திரு எம். திருச்செல்வம் இன்று செனட் சபையில் கூறினார்.

அவசரகாலச் சட்டத்தின்கீழ் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதாலேயே தமிழ்பேசும் மக்கள் இதனை எதிர்க்கிறார்கள் என்று அவர் சொன்னார்.

அவசரகாலச் சட்டத்தை விரைவில் ரத்துச் செய்யுமாறு அவர் கோரினார்.

சிம்மாசனப் பிரசங்கத்திற்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் செனட்டர் திருச்செல்வம் இன்றும் தொடர்ந்து பேசினார், அவர் கூறியதாவது:

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இன்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகிறது. ஆனால் இந்த ஒருவருட ஆட்சியில் செய்த சாதனைகள் பற்றிக் கவனிக்கும்போது பூஜ்யமே. பல சட்டங்களை நிறைவேற்றியுள்ளனர். ஆனால் எதனையும் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. அவசரகாலச்சட்டத்தையும் பத்திரிகைத் தணிக்கையையும் அரசு வெகுவாகப்பயன்படுத்துகிறது. உலகிலுள்ள வேறெந்த நாட்டிலுமில்லாத ஒரு வாழ்க்கையைத்தான் இந்நாட்டுப் பிரஜைகள் அனுபவிக்கிறார்கள். அதனால் இந்த நாட்டில் சர்வாதிகாரம் நடப்பதாக நான்சொல்லவில்லை. ஆனால் சர்வாதிகார ஆட்சி நடக்கும் ஒரு நாட்டில் வாழும் பிரஜைக்குள்ள உரிமைகூட எமக்கில்லை என்றுதான் சொல்கிறேன். திருமணத்தை நடத்துவதற்குக்கூட அரசாங்கத்தின் அனுமதியைப் பெறவேண்டியிருக்கிறது.

இந்தநாட்டின் பொறுப்பு வாய்ந்த ஒரு அமைச்சரான திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா இந்நேரத்தில் வெளிநாடு போகிறாரென்றால் இங்கு நிலைமை கட்டுப்பாட்டுக்கு வந்ததென்றுதானே அர்த்தம். அப்படியானால் அவசரகாலச் சட்டத்தை ஏன் இன்னும் நீடிக்கவேண்டும்.

தமிழ்பேசும் மக்கள் சார்பில் வேண்டிக்கொள்கிறேன் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொண்டுவரும் எந்தச் சட்டத்தையும் ஏற்றுக் கொள்ளமாட்டோம். தமிழரசுக்கட்சிக்குத் தமிழ்பேசும் மக்களில் 75 சதவீதத்தினர் வாக்களித்திருக்கிறார்கள். அமைச்சர்களுக்கு இஷ்டமான ஒரு சில வழக்கறிஞர்களை வைத்துக்கொண்டு ஆட்சியாளர் சட்டங்களை அமுல்நடத்தப் பார்க்கிறார்கள், இதனை ஒருபோதும் நாம் அனுமதிக்கமாட்டோம்''.

## பயங்கரவாதிகளிடமிருந்து துப்பாக்கிகளை கைப்பற்றினர்

கோட்டை, வியா.
டம்புல்ல பகுதியில் பயங்கரவாதிகளின் மீது பாதுகாப்புப்படையினர் சுட்டனர். பயங்கரவாதிகள் திருப்பிச் சுட எத்தனித்தபோது பாதுகாப்புப் படையினர் தந்திரமாக அவர்களிடமிருந்து துப்பாக்கிகளைக் கைப்பற்றிக்கொண்டனர்.

வவனியாப் பாதையில் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றை பயங்கரவாதிகள் சுட்டனர் என்றும், ஆனால் எதுவித ஆபத்தும் ஏற்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை, மாத்தறைப் பகுதிகளில் எதுவித அசம்பாவிதமும் நடைபெறவில்லையென்றும் அங்கு அமைதி நிலவுகிறது எனவும் கூறப்படுகிறது.

பதவியாவில் 42 கிளர்ச்சிக்காரர்களும், கேகாலையில் இரண்டு பெண்மணிகள் உட்பட 28 கிளர்ச்சிக்காரர்களும் குருநாகலில் 12 கிளர்ச்சிக்காரர்களும் சரணடைந்துள்ளனர்.

## 1 மைலுக்கு இ.போ.சபைக்கு 44 சதம் நஷ்டமாம்

கோட்டை, வியா
இலங்கைப் போக்குவரத்துச்சபைக்கு ஒரு மைலுக்கு 44 சதம் நஷ்டம் ஏற்படுவதாக இ போ ச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இ போ ச பஸ்கள் ஒரு மைல் பிரயாணத்தில் ஒரு ரூபா இருபத்திரண்டு சதம் சம்பாதிப்பதாகவும் ஆனால் அச் சேவைக்கு 1 ரூபா 66 சதம் செலவிடுவதாகவும் இதனால் சபைக்கு ஒரு மைலுக்கு 44 சதம் நஷ்டம் ஏற்படுவதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்த ஆண்டு மட்டும் இ போ ச 674 பஸ்களை புதிதாகச் சேவைக்கு விட்டுள்ளது.

இந்த ஆண்டு 17 லட்சம் மைல்களுக்கு சபைதனது சேவையை விஸ்தரித்துள்ளது, இவ்வாண்டு மட்டும் இ போ ச பஸ் வண்டிகள் 1 கோடி 90 லட்சம் மைல்கள் சேவையாற்றியுள்ளன. இதற்கு முந்திய ஆண்டில் 1 கோடி 73 லட்சம் மைல்களுக்கே சேவையாற்றப்பட்டது.

### இந்தியாவில் புதிய சட்டம்

## திருமணமாகாத பெண்கள் கருச்சிதைவு செய்யலாம்!

புதுடில்லி,மே 27
திருமணமாகாத இளம் பெண்கள் கருச்சிதைவு செய்துகொள்ளலாம். இந்திய லோக்சபையில் இன்று இப் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டது.

சுதந்திரா உறுப்பினர்ஒருவர் தவிர மற்றைய எல்லா உறுப்பினர்களும் இம்மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

முன்னைய கருச்சிதைவுச் சட்டத்தை தாராளமாக்கிக் கொள்ளும் விதத்தில் இம் மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

கற்பழிக்கப்பட்டோ அன்றி தவறாக நடந்ததன் மூலமாகவோ கருவுற்றால் கருச்சிதைவு செய்து கொள்ள இச்சட்டம் அனுமதிக்கிறது. இரகசியத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் ஒரு ஷரத்து சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது,

இந்த மசோதாவை எதிர்த்த ஒரே ஒருவரான சுதந்திரா உறுப்பினர் [illegible] பில் இந்திய [illegible] உலைவைப்பதாக இச் சட்டமுள்ளதென்றார்.

மந்திரி பதிலளித்துப் பேசுகையில் இந்திய [illegible] சாரம் [illegible] கொண்டு [illegible].

## செனட்சபை ஒழிப்பு மசோதா

கோட்டை, வியாழன்
செனட்சபை ஒழிப்பு மசோதா ஜூன்மாதம் 10-ம் தேதி செனட்சபையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

செனட்சபை நேற்றுக் கூடியபோது இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

## மணமான இளம் பெண்ணை கடத்தினார்களாம்; 7 பேர் ரிமாண்டில்

யாழ்ப்பாணம், வெள்ளி
கோப்பாயைச் சேர்ந்த 22 வயதான திருமணமான இளம்பெண்ணை கடத்திச் சென்றதாக சந்தேகத்தின் பேரில் 7 நபர்கள் நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் சம்பந்தமாக மேலும் 4பேரைபொலிஸார் தேடிவருகின்றனர். சந்தேக நபர்கள் சார்பில் புறக்டர் ஏ. அன்ரனி ஆஜரானார்.

மாஜிஸ்திரேட் சந்தேக நபர்கள் 7 பேரையும் ரிமாண்டில்வைக்க உத்தரவிட்டு வழக்கை ஜூன் மாதம் 4ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

## சேக்கிழார் விழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ். இந்துக் கல்லூரியில் நாளை நடைபெறும் சேக்கிழார் விழா காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது. இசைமணி திரு கா மாணிக்கராசாவின் தேவாரத்துடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் தேவார இன்னிசைமணிச் செல்வர், தேவாரமணி பி ஏ என் இராசசேகரனின் மாணவர்களான திருமதி ம அருணாசலம், செல்வர்கள் கே குமரேசன், கே சிவபாலன் ஆகியோரது தேவார இசையும் திரு மு ஞானப்பிரகாசத்தின் சொற்பொழிவும், திரு பி ஏ என் இராசசேகரனின் திருமுறைப் பண்ணிசையும், கொக்குவில் புலவர் க. குமாரசுவாமிப்பிள்ளையின் புராணபடனமும், மகேஸ்வர பூசையும் இடம்பெறுகின்றன.

## ஊரடங்கும் நேரம்

இன்று மாலை 7-30 முதல் நாளை காலை 4-30 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

CY 2000 தொடர்பிலக்க சவர்லெற் லொறி நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. மார்க்கண்டு (மாவிகாய்), 2-ம் ஒழுங்கை, மலாலி வீதி, யாழ்ப்பாணம். 2487

நெல்வயல்:
60 ஏக்கர் நல்ல விளைச்சல் நீர் வசதியுடன் இளி நொச்சிப் பகுதியில் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3134, C/o "ஈழநாடு", யாழ்ப்பாணம். 3134

### தேவை

எங்கள் ஸ்தாபனத்திற்கு விற்பனை உதவியாளர் தேவை. பிணைப் பணம் ரூபா 500/- கட்டவேண்டும். விற்பனை அனுபவம் உள்ளவர்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடன் 31-5-71 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் 11 மணிக்குமிடையில் நேரில் வந்து விண்ணப்பிக்கவும். ச. சிவஞானம், 53, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 3132

## திருமண அழைப்பு

3-6-71 வியாழக்கிழமை முற்பகல் 11-30 மணியளவில் சுபமுகூர்த்தத்தில் கல்வயல் வேலுப்பிள்ளை தம்பதிகளின் புத்திரன் திருநிறைசெல்வன் குமாரசாமி அவர்களுக்கும் சாவகச்சேரி பெரியரசடி வேலுப்பிள்ளை தம்பதிகளின் புதல்வி திருநிறைசெல்வி மங்கையர்க்கரசி அவர்களுக்கும் திருமணம் நடைபெறும். 5-6-71 பிற்பகல் 2-30 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்பு உபசாரம். உற்றார், உறவினர், நண்பர்கள் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள். 3135


**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
Daily 10-30 a.m, 4-30 p m
Sylva koscina
Loucastel
in
"THE PLAYERS"
(Bandits of Italy)
தினசரி பி. ப. 2-00
ஜெய்சங்கர்-கே ஆர். விஜயா
நடித்த
பெண்ணை
வாழவிடுங்கள்

**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி.ப. 2-00
சிவாஜி கணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

**வின்ஸர்** — யாழ்ப்பாணம்
காலை 10-30 பி.ப. 2-00
★ சிவாஜி கணேசன் ★ பத்மினி
நம்பியார் — சுந்தரராஜன் — தங்கவேலு
ஜெயலலிதா — மனோரமா
நடித்த
குருதட்சணை

**வெலிங்டன்** யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி.ப. 2-00 மணி
★ ஜெய்சங்கர்
★ வாணிஸ்ரீ
★ லக்ஷ்மி
நடித்த
கன்னிப் பெண்

**கெப்பிட்டல்**
காலை 10, பி.ப.2-00 மணி
நீதிக்குப் பின் பாசம்

**லிங்ஸ்லி**
காலை 10, பி.ப.2-00 மணி
அன்பே வா

**மனோகரா**
காலை 10, பி.ப.2-00 மணி
வெண்ணிற ஆடை

**பிளாஸா**
காலை 10, பி.ப.2-00 மணி
குழந்தையும் தெய்வமும்

அடுத்த வெளியீடு
மூன்றெழுத்து
(வர்ணச் சித்திரம்)


## சுங்க ஏல விற்பனை

கீழ்க்காணும் பொருட்கள் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ந் திகதி காலை 10 30 மணிக்கு யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். விற்பனை நிபந்தனைகள், 1954-ம் ஆண்டு மே மாதம் 28-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் (பகுதி 1 தொகுதி 2) தரப்பட்டுள்ளது. மேற்படி நிபந்தனைகள் ஏலம் தொடங்குமுன்னர் கேள்வியாளர்களுக்கு அறிவிக்கப்படும். பொருட்களை விற்பனைத் தினத்தன்று காலை 9-30 மணிக்குப் பார்வையிடலாம். விற்பனை 17-ம், 18-ம் திகதிகளில் காலை 9 மணிக்குத் தொடர்ந்து நடைபெறும்.

எஸ். எம்.ஜே. சேனரத்ன
ஒப்பம்.
யாழ். மாவட்ட
சுங்க சேகரிப்பாளருக்காக

மா. ம. சுங்க இலாகா,
யாழ்ப்பாணம்,
25-5-71.

ரேடியோ உதிரிப்பாகங்கள்

1. திருகாணிகள் (Bolts) 100.
2. நட்டுகள் (Nuts) 100.
3. வாஸர்கள் (Washers) 100.
4. 5 பைக்கற் சுவிச் தொடர்புகள் ஒவ்வொன்றும் 100.
5. 44 பைக்கற் (Capacitors) கப்பாசிற்றர்கள் ஒவ்வொன்றும் 100.
6. 18 ஏரியல்.
7. 197 'ரெடிகோ' டிரான்சிஸ்டர் டிரான்ஸ்போமர்கள் (Transistor Transfomer)
8. 15 டிரான்சிஸ்டர் கொயில்கள் (Transistor Coils)
9. 6 பெட்டி டிரான்சிஸ்டர் பிளக்குகள்.
10 6 பெட்டி டிரான்சிஸ்டர் கண்டென்சர்கள் (Transistor Condencers)
11. 3 பக்கற் டிரான்சிஸ்டர் கண்டென்சர்கள் (சிறியது)
12. 115 ஸ்பிறிங் கோல்டர்கள் (Spring Helders)
13. 100 ஹோல்டர் ராக்குகள் (Holder Tags)
14. 4 பெட்டி டிரான்சிஸ்டர் எஸ் ரி 513 (ரேடியோ பாகங்கள்)
15. 1 மைக்கிரோபோன்.
16. 2 ஒலிபெருக்கி யூனிற்றுகள்.
17. 97 யூனிஸ்ரோன் டிரான்சிஸ்டர் (ரேடியோ பாகங்கள்)
18. 3 ஒலிபெருக்கி மூடும் துணிகள்.
19. 44 உருக்கு இரும்புகள்.
20. செயற்கை ஆபரணங்கள்.
21. 2 பெட்டிகள் கால்சட்டை பூட்டும் சங்கிலிகள் (Trouser Zip Fastrers)
22. 90 டின் சக்கரின்.
23. 7 மூடை சீயாக்காய்.
24. 4 மூடை சாதிக்காய்பூ.
25. 11 மூடைசாதிக்காய்.
26. 502 ஊற்றுப் பேனைகள் (இந்தியா)
27 சீப்புகள் 1 பெட்டி.
28 தேங்காய் எண்ணெ.
29. ஹோர்லிக்ஸ்.
30. ஒவல்டின்.
31. 16 மூடை பாக்கு.
32. சாய்ப்புக் கடைச் சாமான்கள் 2810

## சோலை வரி ஆதன இடாப்புக்குரிய பத்திரங்கள் அச்சிட்டு வினியோகித்தல்

மேற்படி பத்திரங்கள் அச்சிட்டு வினியோகிப்பதற்குரிய கூறு - விலை (Quotations) என்னுல் 5-6-71 காலை 10-30 வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஏனைய விபரங்கள் பட்டின சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மாதிரிப் பத்திரங்கள் பட்டின சபை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

பொ. நாகலிங்கம்,
தலைவர்,
பட்டின சபை,
சுன்னுகம்.

பட்டின சபை அலுவலகம்,
சுன்னுகம்,
28-5-71. 2811

## மரண அறிவித்தல்

### வண. கே. ஜே. மில்ஸ்

வணக்கத்திற்குரிய கே. ஜே. மில்ஸ் காலமானுர். இறுதிச்சடங்குகள் 29-5-71-ந் திகதி சனிக்கிழமை காலை 7-30 மணிக்கு வட்டுக்கோட்டை ஆசனத்தேவாலயத்திலும், நல்லடக்கம் மானிப்பாயிலும் நடைபெறும். 2813

## பெண் கொலை

காலி, வியாழன்
ஹபரதுவ பொலிஸ் வட்டாரத்தில் ஒரு திருமணமான பெண்மணி சோமா சமரவிக்கிரம என்பவர் அடித்துக் கொலைசெய்யப்பட்டிருக்கிறுர். காலி ஆஸ்பத்திரியில் அவர் மரணமானுர். காலி ஜே.பி.யு.எம். திரு. ரெக்ஸ் விக்கிரமசிங்க விசாரணை நடத்தி கொலை என தீர்ப்பளித்தார். புலன் விசாரணையைத் தொடரும்படியும் சந்தேகநபர்களைக் கைதுசெய்யும்படியும் அவர் பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

## தாஷ்கண்டில் சாஸ்திரி சதுக்கம்

தாஷ்கண்ட், மே 27
தாஷ்கந்தில் லால் பகதூர் சாஸ்திரி சதுக்கத்தைக் கட்டும் திட்டத்தை உஸ்பெகஸ்ட்ட நிபுணர்கள் பூர்த்தி செய்துள்ளனர்.

15 இலட்சம் மக்கள் வசிக்கும் தாஷ்கந்து நகரில் இது மிகப்பெரியமிகஅழகிய சதுக்கமாக விளங்கும்.

இதற்கு அடுத்தாற்போல் "சாஸ்திரி சதுக்கம்" என்ற பாதாள ரயில் நிலையமும் கட்டப்படும்.

இந்தச் சதுக்கத்திலிருந்து ஆறு தெருக்கள் துவங்குகின்றன. ஒரு தெருவுக்கு லால் பஹதூர் சாஸ்திரியின் பெயர் இடப்பட்டுள்ளது.

சாஸ்திரி நினைவுச் சின்னத்துக்கான இடமும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## ஆரம்பம்

கோப்பாய், புதன்
கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரி ஜூன் மாதம் 2-ம் திகதி ஆரம்பமாகிறது. முழு நேர பகுதி நேர வகுப்புகள் யாவும் 2-ம் திகதி முதல் நடக்கும். காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை கல்லூரி நடைபெறும். விடுதி மாணவர் ஜூன் 1-ம் திகதி மாலை 4 மணிக்கு முதல் சமூகமளிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி
இணுவில், அம்பலவாணக் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்தைய வத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது.

9-6-71 புதன்கிழமை மஞ்சமும், 21, 22-6-71 திகதிகளில் தேர், தீர்த்தத் திருவிழாக்களும் இடம் பெறும்.

## மணவாளக் கோலம்

யாழ்ப்பாணம், வெள்ளி
வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரசுவாமி கோவில் மணவாளக்கோலம் இன்று சிறப்பாக நடைபெறவிருக்கிறது. சங்காபிஷேகம், நவசக்தி அர்ச்சனை ஆகியன இடம்பெறும். விசேஷ மேளக்கச்சேரியை அடுத்து மகேஸ்வரபூசையும் இடம் பெறும்.

## நிர்வாக செயலாளர் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு நிர்வாக செயலாளர் ஆங்கிலம்/தமிழ் தட்டெழுத்து, கணக்கியல், காரியாலய அனுபவ தகைமையோடு தேவை. விண்ணப்பிக்கவும்.

வட இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனம்
95/3, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.


**நாகம்ஸ்சினிமா**
சுன்னுகம்
தினசரி 10-30, 4-30
Lee Marvin
Angie Dickenson
in
"THE KILLERS"

**வெல்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி
காலை10-30, பி. ப. 2-30
ஜெய்சங்கர்—வாணிஸ்ரீ
நடித்த
நேர்வழி

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி
காலை10-30, பி.ப.1-30
எம்.ஜி.ஆர்- கே. ஆர். விஜயா
நடித்த
தாழம்பூ

**REGAL** (Jaffna)
Daily 10-30 a m 1-30 & 4-00 p. m
Dirk Bogarade
in
MODESTY BLAISE
(Color)

**RAJAH** — Jaffna
Daily 10-30 a m 1-30 & 4-00 p m
Alain Delon
Mireille Darc
in
JEFF

... விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிலம்பும் திருக்குறளும் ஒற்றுமையின் சின்னங்கள்' தமிழ்நாடு புதிய கவர்னர் உரை

சென்னை, மே 3.

**தமிழ்நாட்டின் வரலாற்றுப் பெருமை தொன்மை வாய்ந்தது. தேசிய ஒருமைப்பாட்டுக்கு மகான்களும் ஆச்சாரியர்களும் பாடுபட்டுள்ளனர். இந்த உண்மையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிலப்பதிகாரமும், திருக்குறளும் எடுத்துக்காட்டுகின்றன. தமிழ் நாட்டுக்கலைகள் அழகும் எழிலும் கொண்டிருப்பதோடு நுண்மையான கலையம்சம் பொருந்தியவை.**

*இவ்வாறு தமிழ் நாட்டில் புதிய கவர்னராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட திரு. கே. கே. ஷா கூறினர். தமிழ்நாட்டு மக்களுக்கு அவர் வானொலி மூலம் விடுத்த செய்தியில் இவ்வாறு தெரிவித்தார்.*

"இந்தியக் குடியரசின் பெருமை மிக்க மாநிலமான தமிழ் நாட்டுக்கு கவர்னராக நான் வந்திருப்பதற்குக் கிடைத்த பெரும் வாய்ப்புக்கு மகிழ்ச்சியடைகின்றேன். தமிழ் நாட்டு மக்களுக்குச் சேவைசெய்யும் வாய்ப்புக் கிடைத்தமையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்நாடு புதிய கவர்னராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்ட திரு கே. கே. ஷா தமிழ்நாட்டு மக்களுக்கு முதல் முதலாக விடுத்த வானொலிச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டு வரலாற்றுப் பெருமை மிகவும் தொன்மைவாய்ந்தது. பாரதத்திற்கும் அதன் அண்டை நாடுகளுக்கும் கலை கலாச்சாரத் தொடர்பை ஏற்படுத்திய சரித்திரச் சான்றுகளை நாம் வரலாற்றில் காணக்கூடியதாக இருக்கிறது. பாரதத்தின் ஒருமைப்பாட்டுக்கு தமிழ் நாட்டு மகான்களும் ஆச்சாரியர்களும் தங்கள் காலத்திலேயே வழிவகுத்து அதற்காகப் பாடுபட்டனர். இவ்வித நல்ல பல கருத்துக்களை அவர்கள் பிறநாடுகளுக்கும் பரப்பியிருக்கின்றனர். சமய சமுதாய நிலைகளில் அவர்கள் இணைக்கச்செய்திருக்கிறார்கள் என்பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்தோன்றிய சிலப்பதிகாரமே அத்தாட்சியாயுள்ளது. ஏறக்குறைய இதே காலத்தில் இயற்றப்பட்ட உலகப் பொது மறையாம் திருக்குறள் மூலமும் உணரலாம். ஓவியம் சிற்பம் ஆகிய நுண்கலைகளில் தமிழ் மக்கள் நுண்மையான கருத்துக் கொண்டிருந்ததோடு அவற்றை மற்றவர்களுக்கும் அளித்தனர். அக்கலைகள் பண்பாட்டுச் சின்னங்களாக இருப்பதுமட்டுமல்லாமல் வரலாற்றுச்சின்னங்களாகவும் இருப்பதைக் காணலாம். அவை வரலாற்றுப் புகழும் அழகும் எழிலும் கொண்டு ஒருமைப்பாட்டுக்கு இலக்காய் விளங்குகின்றன.

தமிழ்நாட்டு மக்கள் இக்கலை உணர்வுடையவர்களாய் மட்டுமின்றி நாட்டு விடுதலை சமூக சீர்திருத்தம் கல்வி அபிவிருத்தி ஆகியவற்றில் தம்பங்கைச் செலுத்தியுள்ளனர். தமிழ்நாட்டு மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்ற காலஞ்சென்ற முதலமைச்சர் திரு. அண்ணாவுக்கு இவ்வேளையில் நான் அஞ்சலி செலுத்துகின்றேன். அவர் மற்ற மாநில தலைவர்களுக்கு முன்மாதிரியாய்த் திகழ்ந்தார். அண்ணாவிடமிருந்து நான் பெற்ற நலவிணக்கந்தான் திரைப்படக்குழு போன்ற பல சிக்கலான பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு எனக்கு உதவியாயிருந்தது.

சமூகத்திற்குச் சிறந்த பணியாற்றுவதே மத்திய அரசினதும் மாநில அரசினதும் கடமையாகும். இப்பணியை விரைந்து செயலாக்குவதே எனது முதல் தரமான கொள்கையாக இருக்குமென்று கூறினார்.

தமிழ் நாட்டின் விரைந்த முன்னேற்றத்தைக் குறிப்பிட்டு, தமிழ்நாடு இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுக்கு எப்பொழுதும் முன்மாதிரி காட்டிவந்துள்ளது. நாடு முழுவதிலுமுள்ள கிராமங்களுக்கு மின்வசதி அளித்திருப்பதோடு விவசாயப் பணிகளுக்கும் மின்வசதி அளிப்பதற்கான மின்சார வாரியம் ஒன்றை அமைத்துள்ளது. 500 வீடுகளைக்கொண்ட ஹரிஜன வீடுகளுக்கு மின்சார வசதி அளித்துள்ளது. அதுமட்டுமல்லாமல் தமிழ் நாட்டு குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க குடிநீர் வாரியம் ஒன்றை அமைத்துள்ளது. திட்டங்களுக்காகத் திட்டக் கமிஷனும், மற்றோர் கமிஷனும் அமைத்திருப்பது அவற்றின் விரைந்த முன்னேற்றத்தைக் காட்டுகின்றன.

முதலமைச்சர் கருணாநிதியினால் வழிநடாத்தப்படும் தமிழ்மக்கள் கடமையும், உறுதியும், நுண்ணறிவும் கொண்டவர்கள். இப்பகுதியிலிருந்து வந்த பலர் எனக்கு உதவியாக இருந்திருக்கின்றனர்.

நான் தமிழ்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது என்னைக் கவர்ந்தவை, தமிழ் மக்களுடைய ஒழுங்கும் ஒற்றுமையுமேயாகும். இதனால்தான் அவர்கள் கூட்டுறவாய் நின்று சிறந்த பணிகளைச் செய்ய முடிகிறது. தமிழ்நாட்டு மக்களிடமிருந்து நெருங்கிய நட்பையும், ஒற்றுமையையும் எதிர்பார்த்துள்ளேன்" என்றார்.

---

# துப்புத் துலக்கும் பூதக் கண்ணாடி

லண்டன், மே 27

பூதக்கண்ணாடி நீண்ட காலமாகவே துப்பறியும் நிபுணர்களுக்குமிகத்தேவையான துப்புத்துலக்கும் சாதனமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் துப்பறியும் நிபுணர்கள் இன்று பாவித்து வரும் சாதனங்களோ மிகப் புதுமையானவை. அன்றைய பூதக்கண்ணாடிகளைவிட ஆயிரம் மடங்கு உருவங்களைப் பெருப்பித்துக் காட்டும் அபார சக்தியுடையன இவை.

"ஸ்டெரெஸ்கான்" எனப்படும் மின்னியக்க நுண்நோக்கிக் கருவி ஒன்றை பிரிட்டிஷ் பொறியியல் விஞ்ஞானிகள் அமைத்துள்ளனர். மிக நுண்ணிய பொருட்களையும் நுட்பமாகப் பெருப்பித்து அவற்றின் தன்மையைத் தெளிவாகக் காட்டிவிடும் அற்புதமான சாதனம் இது.

பிரிட்டிஷ் துப்பறியும் நிபுணர்கள் இந்த நவீன நுண்ணோக்கிக் கருவியின் உதவியைக்கொண்டு குற்றக் கண்டுபிடிப்புத் துறையில் பல சாதனைகளை நிலைநாட்டி வருகிறார்கள். அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற திருட்டு வழக்கில் இறகு மயிர் ஒன்று சிக்கலான பிரச்னையைக் கிளப்பியது. குற்றவாளியின் உடலில் காணப்பட்டது கோழி இறகு மயிரா அல்லது வாத்து இறகு மயிரா என்பதுதான் பிரச்னை நீதிமன்றத்தைத் திணற வைத்த இந்தப் புதிருக்கு விடையளிக்க உதவியது இந்த நுண்ணோக்கிக் கருவி தான் அந்த இறகு மயிர் கோழியினுடையது என்பதை ஐயமின்றி நிரூபித்துக் காட்டிவிட்டது இச்சாதனம்.

அணுப்பிரமாணமுள்ள நுண்ணிய பொருட்களையும் இரத்தக்கறை, தலைமயிர் போன்ற சிறு துப்புகளைக் கொண்டும் பல முக்கிய தகவல்களைத் தந்துவிடும் இந்த நவீன நுண்ணோக்கிச் சாதனங்கள் இன்று குற்றத் தடுப்புத் துறையில் பெரிதும் பயனுள்ளதாக விளங்குகின்றன.

......

## கால் நடைகளுக்கு நோய்

புதுக்குடியிருப்பு, வியா.

புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள கால் நடைகளுக்கு வாய்நோய் கால்நோய் போன்றவை தீவிரமாகப் பரவி வருகின்றன. நடைகள் இன் [illegible] இறந்து விட்டதாக கூறப்படுகிறது.

## வடக்கில் 3 நெற்களஞ்சியங்கள்

குருநகர், புதன்

சமத்தொழிற் திணைக்கள உத்தரவுத் திட்டத்தின்கீழ் வடபகுதி சமத்தொழிற் பகுதிக்கு ஒன்றரை லட்சம் ரூபா நெற்களஞ்சியம் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மூன்று நெற்களஞ்சியங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் சுன்னாகத்தில் இரண்டும் [illegible] ஒன்றும் இடம்பெறுகின் [illegible] இரண்டு நெற்களஞ்சியங்களின் வேலைகள் முடிவுற்றுள்ளன.

புதிய
அசல்
(ரோஜாவர்ணம்)
வின்சென்ட்ஸ்
ஏ. எஸ். சீ
வில்லைகள்
தலைவலி, தடிமல், சளிச்சுரம் மற்றும்
எல்லாவித உபாதைகளுக்கும் நிவாரணி
யாவரும் இப்பொழுது நாடுவது வின்சென்ட்ஸ்
ஏ. எஸ். சீ. வில்லைகளையே

# உலக வலம்

## சீனா கட்டுப்பாடுகளை தளர்த்துகிறது

பீகிங், மே 26

முதலாளித்துவ நாடுகள் பால் இதுவரை சீனக் கம்யூனிஸ்டுகளுக்கு இருந்த கருத்து தற்போது ஓரளவு மாறுபட்டுள்ளதால் சீனத் தலைநகரிலும் மற்றும் சில பிரதான இடங்களிலும் உள்ள பிறநாட்டவர்களுக்கு குறிப்பாக ராஜதந்திரிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளும் ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளன.

சீனத் தலைநகரான பீகிங் இன் பெரும்பகுதியில் அன்னியர் செல்லவோ தங்கவோ தடை விதிக்கப்பட்டிருந்தது தற்போது இத்தடை குறிப்பிட்ட அளவு நீக்கப்பட்டுள்ளது நகருக்கு வெளியில் நகரில்உள்ள ராஜதந்திரிகளோ அல்லவோ பிறநாட்டவரோ செல்லவேண்டுமானால் பர்மிட் பெற்றே செல்லவேண்டும் இப்பிறநாட்டவர்கள் சீனர்களைச் சந்தித்துப்பேசவேண்டுமானால் அதிகாரபூர்வமான ஒழுங்குகளை மேற்கொண்டே சந்திக்க வேண்டும். தாம்நினைத்தபடி அவர்களைச் சந்தித்து சிநேகபூர்வமாக அளவளாவவோ அல்லது கலந்தாலோசிக்கவோ முடியாது. தற்செயலாக தவறுதலாக அதிகாரபூர்வமான அங்கீகாரமின்றிக்கதைத்துவிட்டால் தண்டனையளிக்கப்படும். உத்தரவுபெற்று பேச்சுவார்த்தை நடாத்தினாலோ அல்லது உரையாடினாலோ அதை பொலிசாரிடம் திருப்பிக் கூறவேண்டும்.

## போருக்கான காரணம் பற்றி ஆராய்ச்சி

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே மனிதன் போரில் ஈடுபட்டிருந்தான் பண்டைக்காலத்தில் வாழ்ந்த ஒவ்வொரு குழுவினரும் தங்களுக்கிடையே ஏற்படும் பூசல்கள் காரணமாகக் கைக்குக்கிடைத்த ஆயுதங்களை பயன்படுத்தி ஒருவரை ஒருவர் தாக்கினர். இவ்வாறு முதல் சண்டை ஆரம்பமான நாளன்றுதொட்டு இன்றுவரை மனிதன் தன் இனத்திடையே இத்தகைய போர் நிகழக் காரணம் என்ன எனச் சிந்தித்துக்கொண்டே வருகிறான்.

இன்று இந்த 20-ம் நூற்றாண்டில் அரசியல் விஞ்ஞானிகளும், அறிஞர்களும் இவ்விடயம்பற்றிஆராய்ந்து இவ்விடயத்தில் மேலும் சிக்கலடைந்தவர்களாகவுள்ளனர். சமீபத்தில் மிச்சிக்கன் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் டாக்டர் ஜே டேவிட்சிங்கர் தலைமையில் உலக நாடுகளதும் மக்களதும் எத்தகைய போக்குகளும், செயல்களும் சர்வதேச யுத்தத்திற்கும், உலக சமாதானத்துக்கும் உதவிசெய்துள்ளன என்பது குறித்து ஆராய்ச்சியில் இறங்கியுள்ளனர்.

## 'புரட்சிகர நீதி'

பிடல் கஸ்ரோ "புரட்சிகர நீதியில்" எப்பொழுதும் நம்பிக்கை உடையவர். தான் நம்பிக்கை வைத்துவரும் இந்தப் புரட்சிகர நீதியை சமூக அரசியல் குற்றவாளிகளுக்குக் கஸ்ரோ வழங்கி வருகிறார்.

இளைஞர்கள் வேலைகளைச் செய்யாது உடத்தல், வேலையின்றி இருத்தல் வேலைக்குத் தாமதமாகச்செல்லல் ஆகிய குற்றங்களுக்கு மேற்படி நீதியை கஸ்ரோ வழங்கி வருகிறார் இந்த நடவடிக்கைகள் யாவும் குற்றத்தின் பாற்படும் என்பதையும் அதற்குத் தண்டனையளிக்கப் படும் என்பதையும் விளக்க புதிய சட்டமொன்றையும் கொண்டுவந்துள்ளார். இவ்வருடம் ஏப்பிரல் மாதத்திலிருந்து இச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. கியூபாவில் இப்புதிய சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் 90,000 பேர் வேலைக்குப் புதிதாகப் பதிவுசெய்துள்ளனர் மேற்படி சட்டத்தை மீறுபவர்கள் இங்கு பாதுகாப்பில் வைத்திருக்கப் படுவார்கள் அல்லது அவர்கள் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்படுவார்கள். பொருளாதார வளர்ச்சிக்கு கஸ்ரோ எடுத்துள்ள இந்த 'புரட்சிகர நீதி' முறை நன்மையளிப்பதாக அமைந்துள்ளது.

## 'ஆங்கில நோய்'

"ஆங்கிலநோய்" என்னும் சொற்றொடர் மேற்கத்திய நாடுகளில் சர்வசாதாரணமாக வழங்கிவருவதொன்றாகும். தொழிற் சங்கங்களால் வேதனம் சம்பந்தமாக எழும்பிரச்னையைத் தீர்க்க நோட்டுக்களை அடித்து கூடிய வேதனத்தைக் கொடுப்பதையே இச் சொற்றொடர் குறிக்கிறது இந்நோய் மேற்கு ஐரோப்பா முழுவதும் பரவியுள்ளது. கடந்தாண்டு பிரிட்டனில் 15ல் இருந்து 20 வீதமாக அதிகரித்துள்ள வேதனம் ஐரோப்பிய நாடுகளைத் திகிலடையச் செய்தது. இவ்வதிகரிப்பு மேற்கு ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் சம்பள அதிகரிப்பினும் பார்க்க அதிகமாகவிருந்தது. பின்னர் பிரிட்டன் 10 வீதமாகக் குறைத்ததும் இது நியாயமானதொரு உடன்பாடு என ஐரோப்பிய நாடுகள் கருதின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ்க் காப்பியம் தந்தவர் -- சேக்கிழார் --

**சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம்**
(தலைவர், கலைநகர் இந்துசமய மன்றம், சித்தன்கேணி)

**அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தினர் நாளை 29-ம் திகதி நடாத்தும்சேக்கிழார் குருபூசையை முன்னிட்டு, இச்சிறப்புக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

செந்தமிழ் மொழி சிறப்புற்று ஓங்கவும் சைவத்திரு நெறி ஏற்றம் பெறவும் தொண்டை நாட்டிலே இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்றாகிய புலியூர்க் கோட்டத்திலே, குன்றத்தூரிலே, வேளாளர் குலத்திலே, சேக்கிழார் குடியிலே, அருண்மொழித்தேவர் அவதாரம் செய்தார். அருண்மொழித்தேவர் சேக்கிழார் குலத்தை விளங்க வைத்த காரணத்தால், சேக்கிழார் குடியிற்பிறந்து சேக்கிழார் என்னும் சிறப்புப் பெயரையும் பெற்றார். இவருடைய சரித்திரம் யாவரும் அறிந்த தொன்றேயாம்.

சேக்கிழார் பெருமான் தந்த தெய்வத் தமிழ் நூலாகிய 'திருத்தொண்டர் புராணம்' ஈடிணையில்லாதது. தமிழ் மொழியில் மட்டுமல்லாது வேறு எந்தமொழியிலும் இத்தகைய பெருமைவாய்ந்த அரும்பெருங் காப்பியத்தைக் காணமுடியாது. சைவத்திருத் தொண்டர்களின் அன்பைப் பெருக்கி- அன்பு வடிவாகவே வாழ்ந்து காட்டிய சைவப்பெரியோர்களுடைய வரலாறுகளைத் தமிழ் மொழியிலே முத்தமிழ்ச் சுவையும் பொருந்த செந்தமிழ்க் காப்பியமாக- பைந்தமிழ்ப் பெருநூலாக யாத்த தமிழ்ப் பெரும் புலவன் சேக்கிழார் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய திருத்தொண்டர்களது வாழ்க்கை வரலாற்றை எல்லாம் வளமான பெருநூலாகத் தந்தவர் சேக்கிழார். சேக்கிழார் தந்தசெந்தமிழ்இலக்கியவளமும் வரலாற்றுத் தூய்மையும் படிக்கப்படிக்க இன்பமும் தரவல்லது சேக்கிழார் தந்த தெய்வ மணக்கமழும் செந்தமிழ். படிப்பவர் அனைவரது நெஞ்சங்களையும் கனியவைக்கும்தனிச் சிறப்புப்பெற்றது.

**இலக்கியங்களுள் முதன்மையானது**

'பெரிய புராணம்' எனவுலகோராலும்போற்றிப்புகழப் படும் 'திருத்தொண்டர் புராணம்' பக்திச்சுவை நிரம்பிய ஒரு செந்தமிழ் நூல். இதனாலன்றோ சேக்கிழார் பெருமானை "பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப்பாடிய கவிவல்லன்" என்று அறிஞர்கள் போற்றிப் புகழ்கின்றனர். சேக்கிழார் தந்த "திருத்தொண்டர் புராணம்" சைவப்பெரியாரின் வரலாறு கூறும் நூலாக மாத்திரம் அமையாது சைவ சமய வரலாறுகூறும் சரித்திர நூலாகவும் தமிழர் வரலாறு கூறும் வரலாற்று நூலாகவும் இது தனிச் சிறப்புடைய பக்திப் பெருநூலாய்ப் பன்னிரண்டாந் திருமுறையாயும் அமைந்து விளங்குவது மட்டுமன்றி, முத்தமிழ்ப் பெருங்காப்பியமாகவும் சிறந்து விளங்குகின்றது.

செந்தமிழ்ப்புலவன் சேக்கிழார் தந்த புராணம் சொன்னயம், பொருணயம், செறிந்து சிறந்த பெருங்காப்பியப் பண்பைத் தன்னுள் அடக்கித் தமிழ் இலக்கியங்களுள் முதன்மையான ஸ்தானத்தை வகித்துக் கொண்டு தலைநிமிர்ந்து நிற்கின்றது. திருத்தொண்டர் புராணத்துக்குப் "பெரிய புராணம்" என்பது பெருவழக்காக வழங்கப்படும் பெயராகும்.

**சேக்கிழாரது திருக்கோலம்**

"முண்டமானதிரு முடியு மிட்ட திரு முண்டமும் கவச முந்துணைக் குண்டலங்களு மிரண்டுகாதினும் வடிந்தலைந்தகுழை யுந்திருக் கண்டமாலைகர மாலையுஞ் சிரசு மாலையுமிகவின் விளங்கவே தொண்டர் சீர்பரவு வாணனைந்த சுபசரிதை சோழனெதிர் கண்டனன்" என்று சேக்கிழார் நாயனார் புராணத்தில் சேக்கிழாரது திருக்கோலக் காட்சியை உமாபதி சிவாச்சாரியார் காட்டியுள்ளார். சேக்கிழார் முண்டிதமாகிய திருமுடியும் திரிபுண்டரமாகத் தரித்த விபூதியும் உருத்திராக்கங்களும் இணையாகியகுண்டலமும் இரண்டுகாதினிடத்தும் தொங்கி அசைந்து கொண்டிருக்கின்ற கண்டிகையும் கைக்கட்டும், சிரத்தின் மாலையும் கொண்ட அழகு பொருந்தியவர் என்பதை மேற்படி பாடல் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

**சேக்கிழார் பெருமை**

"தூக்கு சீர்த்திருத்
தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல
வல்ல பிரானெங்கள்
பாக்கி யப்பய னாப்பதி
குன்றைவாழ்
சேக்கு ழானடி சென்னி
யிருத்துவாம்"

என்று மாதவச் சிவஞான சுவாமிகள், சேக்கிழாரின் பெருமையைப் பாராட்டிப் பாடியுள்ளார். சைவ மக்களாகிய நாம் செய்த பாக்கியப் பயனாலேயே சேக்கிழார் பெருமான் குன்றத்தூரில் வந்து தோன்றினார் என்று சிவஞானசுவாமிகள் போற்றத்தக்க தகைமை வாய்ந்தவர் சேக்கிழார். இத்தகையசிறப்புப் பெற்ற 'சேக்கிழான் அடி சென்னி இருத்துவாம்' என்று சுற்றடியில் மாதவச் சிவஞானசுவாமிகளே பாடி, சேக்கிழாரின் பெருமையை நிலை நிறுத்துதல் காண்க.

இது மாத்திரமல்ல, கருங்கடலைக் கையினால் நீந்திக் கரையேறுதல் எளிது என்வும் முந்நீரென்னும் கடற் கரையிற் பொருந்திய நுண்ணிய மணலையும் இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லலாமெனவும் பெரிய கடலின் மறித்து மறித்து வருகின்ற அலைகளையும் எண்ணித் தொகையைக் கூட்டிச் சொல்லலாமெனவும் கடல் மீனையும் அளவிடலாம் எனவும் ஆகாயத்திலுள்ள விண்மீன்களையும் அளவிடலாம் எனவும் ஆனால் சிவபிரான் திருவடிகளைத் தமது சிரசில் தரித்த திருத்தொண்டர் புராணத்தை அளவிட்டுச் சொல்ல நமது சேக்கிழார் நாயனாருக்கு எளிதன்றித் தேவர்களுக்கும் அரிதாகும் என்று சேக்கிழார் நாயனார் புராணத்தில் கூறப்பட்டிருப்பதிலிருந்துசேக்கிழாரின் பெருமை தெளிவாகின்றது.

சேக்கிழார் தந்த தெய்வத் திருநூலைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்கள் உள்ளத் தெளிவு பெற்று, இறைவனிடம் பேரன்பு பூண்டு, திருத்தொண்டில் ஈடுபாடு உடையவராய் இம்மை மறுமை வீட்டுப் பயன்களை இனிதேபெறுவர் 'செம்மை மூகில் பைங்கழற் புண்டரீக மலர் தெண்டனிட்டு வினை போக்குவார் பிறவி நீக்குவார்" என்று சேக்கிழார் புராணம் கூறுவது போல் வள்ளன்மைமிக்கமேகத்தை ஒத்த அருண்மொழித்தேவரது திருவடித்தாமரைகளுக்கு தெண்டனிட்டுத் தீவினைகளை நீக்கிக்கொள்கிறவர்களே பிறவியையும் நீக்கிக் கொள்வர்.

நாளை மே 29-ந் திகதி சேக்கிழார் குருபூசைத் தினம் ஆகும் இத் தினத்தை அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் தனது ஆரும் ஆண்டுச் சேக்கிழார் குருபூசைத்தினமாக கொண்டாடுகின்றது. இக்கொண்டாட்டம் சிறப்புறுவதாக "அப்பாலும் அடிச்சார்ந்தார் புராணம் முதலியவற்றிலிருந்து சேக்கிழார் பெருமானது மிகவிரிந்த மனப்பான்மை தெளிவாகின்றது. திருத்தொண்டத்தொகை பாடியருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தலைவனாகக் கொண்ட பெரியபுராணம் என்னும் வரலாற்றுக் காவியத்தில் சேக்கிழார் பெருமான் சுந்தரர் காலத்துக்கு முன்னுள்ள காலத்திலும் அவருக்குப் பின்னுள்ள காலத்திலும் இருந்த அடியாராகிய காலத்தாற்அப்பாலும் தமிழ்நாட்டுக்கு அப்பால் உள்ள அடியாராகிய இடத்தால் அப்பாலும் அடிச்சார்ந்த பெரியாரெல்லாம் பாடுதலைக் காண்கிறோம். ஆகவே சேக்கிழார் தந்த அரிய நூல் எக்காலத்துக்கும் எந்நாட்டவருக்கும் அமைந்த பெருநூலாகவும் திருநூலாகவும் விளங்குவதைக் காண்கிறோம் ஆகவே உலகப்பொது நூலாகிய இந்த அரும் பெரும் நூலைத்தந்த சேக்கிழார் பெருமான் உலகம் முழுதுக்கும் உரியவர். உலகம் முழுதும் வேற்றுமையின்றிப் போற்றற்குரிய சேக்கிழார் பெருமான் குருபூசையில் அனைவரும் கலந்து கொண்டு அதனைச் சிறப்பிப்பாராக. சேக்கிழாரைப் போற்றுதல் சைவத்தையும் தமிழையும் போற்றுதலாகும். நல்லன எல்லாவற்றையும் போற்றுதலாகும்.

வாழ்க சேக்கிழார். வாழ்க அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம். 'செல்வமலி குன்றத்தூர் சேக்கிழாரடி போற்றி'

......

## பீலிக்ஸ் ராணுவ உதவி கோருவார்

கோலாலம்பூர்: கொழும்பில் நடைபெறும் பொதுநல அமைப்பு நாடுகளின் பாராளுமன்ற மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றுள்ள பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மகாநாடு முடிவுற்றதும் வாஷிங்டன்; லண்டன் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்வார் எனத் தெரிகிறது.

அவர் வாஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி திரு நிக்சனை சந்தித்து இந்நாட்டிற்கு வேண்டிய ராணுவ உதவி மற்றியும் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. பிரிட்டிஷ் பிரதமர் திரு எட்வர்ட் ஹீத்தையும் வெளிநாட்டு அமைச்சரையும் சந்தித்து உரையாடுவார். அமெரிக்காவும் பிரிட்டனும் பயங்கரவாதிகளின் தாக்குதலின்போது உடனடியாக உதவிசெய்த நாடுகளில் சிலவாகும்.

——

## சென்னா ரெட்டியுடன் இந்திரா ஆலோசனை

தெலுங்கானா சமிதித் தலைவர் திரு சென்னாரெட்டியுடன் தெலுங்கானா பிரச்னைபற்றி பேச்சுவார்த்தை நடத்த பிரதமர் இந்திரா அழைத்துள்ளார். இவ்வாரக்கடைசியில் இப்பேச்சுவார்த்தை நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

# நாடு நலம் பெற நற்றொண்டு புரிந்த 'நம்பியாண்டார் நம்பி

**வித்துவான் சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை**
(பி. ஏ. கௌரவ சைவசித்தாந்த விரிவுரையாளர்)

திருமுறை வழிவந்த நம்மனோர்க்கு இருகண் போன்றவர்கள் நம்பியாண்டார் நம்பியும் தெய்வச் சேக்கிழார் பெருமானுமாவர். இருவர் தினமும் முன்பின்னாக வருவது தெய்வத் திருவருள் தந்த அமைப்பு.

ஆயிரமாண்டுகளுக்கு முன்னர் எந்நாடும் போற்ற அரசாண்ட பெருமன்னராகிய இராசராசச் சோழர் திருமுறைகளைப் பெற முடியாமற் பெரிதும் துயருற்றான். அவன் துயரைப் போக்கியதுமன்றி ஆயிரமாண்டுகளாக நமக்கு உயிராகவும் உணர்வாகவும் இலங்குகின்ற தேவாரத் திருமுறைகளைக் கறையானிடமிருந்து இப்போதுள்ள அளவிலேனும் காப்பாற்றித் தந்தவரே நம்பியாண்டார் நம்பிகள்.

நம்பிக்கு உதவியவர் தும்பி திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாரின் திருவருளுக்கு ஆளாகித் திருமுறைகளைக் கண்டெடுத்துத் தொகுத்து நமக்கு அளித்த "தமிழ் வியாச" பகவானே நம்பியாண்டார் நம்பி.

நம்பி திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் வழிவந்த பெண்மணியின் துணையுடன் திருமுறைகளுக்குப் பண்ணும் வகுத்தளித்தார். நம்பியில்லையேல் திருமுறைகளுமில்லை. திருமுறைப்பண்ணிசையுமில்லை.

பெரியபுராணத்திற்கு மூலமாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய திருத்தொண்டத்தொகையை மீட்டுத்தந்த நம்பி தும்பிமுகனின் திருவருளினால் திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடி அதிலே நாயன்மார் ஊர், திருத்தொண்டு முதலியவிபரங்களையும் அளித்தார். அது மாத்திரமன்றி 'புராணம் பாதி பிள்ளையார்பாதி' என பெரியபுராணத்திலே பெரிதும் மதிக்கப் பெறுகின்ற ஞானசம்பந்த சுவாமிகள் மீது சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்த ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, விருத்தம், மும்மணிக்கோவை, உலாகலம்பகம், தொகை ஆகிய ஆறுபிரபந்தங்களையும் பாடியருளினார்.

தமிழ்ச் சைவ உலகின் உயிர்ப்பாக இலங்குகின்ற ஞானசம்பந்தப் பெருமானை பின்வந்த சேக்கிழார் பெருமான் முதலியவர்க்கு அறிமுகஞ் செய்து வைத்தவர் நம்பியாண்டார் நம்பிகளே சேக்கிழார் பெருமான் தமது முன்னோடியான நம்பியாண்டார்நம்பி காட்டிய திருநெறிய தமிழ் மரபிலே சென்று நாமுய்ய நாடுய்ய நானிலமுய்ய 'உலகெலாம்' எனத் தொடங்குகின்ற திருத்தொண்டர் புராணத்தைஅளித்தார் என்பதைச் சந்தானகுரவரும்திருவடங்கள் ஆக்கத்திற்கு உதவியவரும் பதினான்கு சித்தாந்த சாத்திரங்களில் எட்டினை அருளியவருமாகிய உமாபதிசிவாச்சாரிய சுவாமிகள் தாம் பாடியருளிய திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம் முதலியவற்றால் அறிவுறுத்தியுள்ளார்.

ஞானசம்பந்தர், நம்பியாண்டார்நம்பி, சேக்கிழார். உமாபதிசிவாசாரியார் ஒரே மரபுவழிவந்தவர்கள். ஆயிரமாண்டுகளாக வாழையடி வாழையாகப் போற்றிப் பாதுகாக்கப்படுகின்ற திருநெறித் தெய்வத் தமிழ்ச்சுடரின் கொழுந்துகள்.

வெவ்வேறு நூற்றாண்டுகளிலே வாழ்ந்த தமிழ்மக்[...] வழிப்படுத்திய இந்தச்

[5-ம் பக்கம் பார்க்க]

## அறிவித்தல்
### சீமேந்து விநியோகம்
**யாழ்ப்பாண மாவட்டம்**

பாவனையாளர்களுக்குச் சீமேந்து விநியோகம் செய்வதற்கென பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போதியளவு சீமேந்து வழங்கப்பட்டு வருகிறது. சீமேந்து தேவைப்படுவோர் பிரிவுக் காரியாதிகாரியின்(D.R.O.)சிபாரிசுடன் அண்மையிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தங்கள் தேவைகளைப் பெறுமாறு வேண்டப்படுகின்றனர். 1971-ம் ஆண்டு வைகாசி மாதம் இந்த ஒழுங்கு நடைமுறையிலிருக்கும்.

ஆனி முதலாம் திகதி தொடக்கம் 25 பைகளுக்கு மேல் தேவைப்படுவோர், காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை விற்பனவு அதிகாரியிடம் கிடைக்கும் ஓர் விண்ணப்பப் பத்திரத்தில், காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை அதிபரிடம் நேரடியாக விண்ணப்பித்துச் சீமேந்து பெற்றுக் கொள்ளலாம். 25 பைகள் வரை தேவைப்படுவோர் தொடர்ந்தும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலேயே பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒப்பம்: ஏ. பிரான்சிஸ்,
பதில் தொழிற்சாலை அதிபர்.

காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.
18-5-1971.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'உள்ளப்பக்குவத்தை விளையாட்டு மூலம் பெறலாம்'

யாழ்ப்பாணம், வியாழன் விளையாட்டுக்கள் உடல் உறுதியை மட்டும் வளர்ப்பதில்லை உள்ளத்தை வளர்ப்பதற்கும் விளையாட்டுக்கள் பெருந்துணை புரிகின்றன. மத்தியஸ்தரின் முடிவை மனமகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வதற்குப் பக்குவம் நிறைந்த உள்ளம் வேண்டும். இந்த உள்ளப்பக்குவத்தை விளையாட்டுகள் மூலம் நாம் அடையமுடியும் உயர்ந்தவர்களாக நாம் உலகத்திலே வாழமுடியும்.

இவ்வாறு குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம் நடாத்திய முதலாவது கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிப் பரிசளிப்பு விழாவிற் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு எஸ். ஆறுமுகம் குறிப்பிட்டார்.

குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் மன்ற மைதானத்தில் கடந்த திங்கள் நடந்த இவ்விழாவுக்கு கிராமசேவகர் திரு. பி முருகையா தலைமை வகித்தார்கள்.

கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் குரும்பசிட்டிக் கைப்பந்தாட்டக் கழகம், காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம், உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ், வசாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம், ஏழாலை சரவணை நிரந்தாட்டக் கழகம் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழகம், குப்பிளான் விக்னேஸ்வராக் கழகம் காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றம் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகம், தையிட்டி ஸ்ராரீஸ் விளையாட்டுக்கழகம், உடுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் குரும்பசிட்டி வளர்மதி ச. ச. நிலையம் ஆகிய பன்னிரண்டு விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றின.

இறுதிப் போட்டியில் குப்பிளான் விக்னேஸ்வராக் கழகமும் குரும்பசிட்டி கைப்பந்தாட்டக் கழகமும் மோதின வெற்றிக்கேடயத்தைக் குரும்பசிட்டி கைப்பந்தாட்டக்கழகம் சுவீகரித்துக்கொண்டது. இரண்டாவதாக வந்த குப்பிளான் விக்னேஸ்வராக் கழகத்துக்குப் பாராட்டுக்கிண்ணம் வழங்கப்பட்டது. பரிசுகளை அதிபர் திரு. எஸ். ஆறுமுகம் வழங்கினார்.

நன்றி தெரிவித்துப்பேசிய சனசமூக நிலைய மேற்பார்வை உத்தியோகத்தர் திரு. வ. கிருஷ்ணசாமி சுற்றுப்போட்டி வெற்றிக் கேடயத்தை உதவிய திரு. வ. இராசரத்தினம் அவர்களையும் உற்சாகத்துடன் பங்கு பற்றிய விளையாட்டுக்கழகங்களையும் வெகுவாகப்பாராட்டினார்.

## விளையாட்டு மைதானம்

புதுக்குடியிருப்பு, வியா. புதுக்குடியிருப்பு பகுதியில் பொது விளையாட்டு மைதானமொன்றில்லாததால் இப்பகுதி விளையாட்டுக் கழகங்களும் வாலிபர்களும் கவலைகொண்டுள்ளன. விளையாட்டரங்கொன்று நிறுவப்படவேண்டிய அவசியம் பற்றித் தற்போது பல விளையாட்டுக் கழகங்கள் வலியுறுத்தி வருகின்றன.

.....

## தும்புத் தொழிற்சாலை நிறுவத் தீர்மானம்

அம்பன், வியாழன் வடமராட்சி கிழக்குப் பகுதியில் உருவாக்கக்கூடிய சிறந்த கைத்தொழில் தும்புத் தொழிற்சாலையே வடமராட்சி கிழக்குப் பகுதியில் கூடுதலாக வாழும் மீனவர்களது தொழில் உபகரணமே யாதலால் இப்பகுதியில் ஒரு வருடத்துக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட கயிற்றை இப்பகுதி மீனவர்கள் கொள்வனவு செய்கின்றனர் என அம்பன் காந்தி சேவாகிராம முன்னேற்றச் சங்கம் பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்த வடமராட்சி வடக்கு, கிழக்கு காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்து கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இப்பகுதி மக்கள் தங்களுக்கு தேவையான தும்புப் பொருட்களை பிறரிடமிருந்து எதிர்பாராது இங்கேயே உற்பத்திசெய்ய முயற்சி செய்வதுடன் ஏற்றுமதி செய்யுமளவிற்கு உற்பத்தி செய்யவும் வேண்டும் எனவும் கூறினார்.

அம்பன் காந்திசேவாக் கிராமமுன்னேற்றச் சங்கம் விரைவில் தும்புத் தொழிற்சாலையொன்றை அம்பனில் நிறுவவதெனத் தீர்மானித்தது.

குடிசைக் கைத்தொழில் உதவி ஆணையாளர் ஜே. ஜே தேவசகாயம் உட்பட வேறுபலரும் உரையாற்றினர்

## "சித்தவைத்தியத்தை தமிழிலே பயிலவேண்டும்"

### மானிப்பாய் கி. ச. தீர்மானம்

யாழ்ப்பாணம், வியா சித்தவைத்தியத்திற்கு சமஸ்கிருதம் தேவையற்றது. சித்தவைத்தியம் பயிலும் மாணவர்களுக்கு தமிழே முதல் பாஷையாயிருக்க வேண்டும். வேண்டுமானால் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாக வைத்துக் கொள்ளலாம் எனக் கூறும் தீர்மானம் மானிப்பாய் கிராமசபையில் நிறைவேற்றப்பட்டது.

சித்த வைத்தியத்தைப் பயிலும் மாணவர்களுக்குத் தமிழே பிரதான மொழியாகவும் வேண்டுமானால் ஆங்கிலம் இரண்டாவது மொழியாகவும் இருக்கலாம் என்ற தீர்மானத்தைச் சபைத்தலைவர் திரு. சி மார்க்கண்டு கொண்டுவந்தார் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சித்தவைத்திய ஏடுகள் நூல்கள் மற்றும் வைத்திய சம்பந்தமான சகல விஷயங்களும் தமிழிலேயே இருக்கின்றன. கி. மு 500 வருடங்களுக்கு முன்பிருந்தே சித்தவைத்திய சம்பந்தமான வாகடங்களும் நூல்களும் ஏடுகளும் தமிழில் இருப்பதால் தொடர்ந்து தமிழ் மொழியே சித்த வைத்தியத்துக்குப் பிரதான பாஷையாக இருக்க வேண்டும் என்று தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நிரந்தரக் கொள்கைக்கு மாறாக ஆயுர்வேத இலாகா தமிழிலோ ஆங்கிலத்திலோ எழுதும் கடிதங்களுக்குச் சிங்களத்திலேயே பதில் அனுப்புவதற்கு இத்தீர்மானத்தில் வருத்தம் தெரிவிக்கப்பட்டது

## பாக். பட்ஜெட்டில் 150 கோடி ரூபா துண்டு

### சூறாவளியும் யுத்தமும் காரணமாம்

புதுடில்லி, மே 27 பாகிஸ்தானின் ஜூலை மாத பட்ஜட்டில் 150கோடி ரூபா துண்டுவிழுவதாக ராவல் பிண்டியிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிப்பதாக இந்தியவானொலி அறிவித்தது சென்றவருட இறுதிப்பகுதியில் [illegible] நடைபெற்ற சூறாவளியும், இப்பொழுது நடைபெறும் சண்டையுமே இதற்குக் காரணமெனச் சொல்லப்படுகிறது.

பாகிஸ்தான் ஜப்பானிடமிருந்து 40 லட்சம் டொலர் தொகை உதவியை எதிர்பார்ப்பதாகவும் ஆனால் அவ்வுதவியை கொடுப்பது பற்றிய முடிவை ஜப்பான் இதுவரையும் தெரிவிக்கவில்லை என பாகிஸ்தான் வாரஏடான "எக்கானமிஸ்ட்" எழுதியுள்ளது.

இதற்கிடையே, பாகிஸ்தான் ஐ நா. பிரதிநிதி பாகிஸ்தானுக்கு வருவதை ஏற்றுக்கொள்வதாக ஐ.நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட்டுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது. இக்கடிதம் இன்று நியுயோர்க்கில் வெளியிடப்பட்டது. அகதிகளுக்கு ஐ.நா. வும், மற்றும்ஸ்தாபனங்களும் அளிக்கும் உதவி மனிதத்தன்மை என்ற கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டுமென்று அதில் தெரிவித்துள்ளது. இதற்கு முன்பாக இஸ்லாமாபாத் மூலமே எந்த உதவியையும் வெளிநாட்டு ஸ்தாபனங்கள் அளிக்கலாம் என பாகிஸ்தான் தெரிவித்திருந்தது.

டாக்காவிலுள்ள திரைப்படக் கொட்டகைகளில் உருது மொழித்திரைப்படங்களை மட்டுமே திரையிடலாமென பாகிஸ்தான் ராணுவ உத்தரவு பிறப்பித்துள்ளதாம். லாகூர் பத்திரிகையாளர் நால்வர் இராணுவக் கட்டுப்பாட்டை மீறிச் செய்திகள் பிரசுரித்தார் என்பதன்பேரில் இராணுவ நீதி மன்றத்தில் விசாரிக்கப்பட இருக்கிறார்.

## தன்னியக்க மூலம் நெல்விளைச்சல்

மாஸ்கோ, மே. 27 தன்னியக்க முறைநெல் விளைச்சலில் இங்கு உபயோகிக்கப் படுகிறது வடகாக்கேஸஸ் வயல்களில் இம்முறை அமுல் படுத்தப்பட்டு வருகிறது.

தானியம்வளரும் பருவம் பூராவும் ஆறுகளின் நீர்வற்று நல்தேவையான மட்டத்தில் தன்னியக்க சாதனங்கள் மூலமாக நிலைநாட்டப்படுகிறது

இம்முறை கையாளப்பட்டதன் பயனாக பன்னை விக சென்ற ஆண்டின் மகசூல் 10சதவிகிதம் அதிகரித்துள்ளது. ...

## கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு 5 வருடம் சிறை

காலி வியாழன் ஏச் ஏ அந்திமில் என்பவருக்கு காலி அசைஸ் கமிஷனர் திரு டி இயு எம் சிறிமானே 5 வருட கடுமியச் சிறைத்தண்டனை விதித்தார் கொலை முயற்சி வழக்கொன்றில் இந்நபர் ஜூரிசபையினரால் குற்றவாளியென ஏகமனதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நீதியரசர் சிறைத்தண்டனை விதித்தார்.

ஜி அல்வேனிஸ் என்ற விவசாயியை அந்திமில் 1968 அக்டோபர் மாதம் 5ம்திகதி கூரிய கத்தியொன்றினால் குத்திக் கொலைசெய்ய முயன்றதாக இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்தது. முடிக்குரிய தரப்பில் திரு ஷிப்லி அஸீஸ் ஆஜரானார்.

## நல்லை ஆதீனத்தில்

## இரு பெருங்குருபூசைகள் இன்று ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், வெள்ளி நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி குருபூசையும், நாளைய தினம் பெரியபுராணம் அருளிய சேக்கிழார் பெருமான் குருபூசையும் இரு பெரும் குருபூசை விழாக்களாக நடைபெறச் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தம்பிரான் ஸ்வாமிகள் ஏற்பாடு செய்துள்ளார்.

நம்பியாண்டார் நம்பி விழாவில் 'தம்பியும் நம்பியும்' என்னும் பொருள் பற்றித் தம்பிரான் ஸ்வாமிகள் இன்னிசை விரிவுரை நிகழ்த்துவார்

சேக்கிழார் விழாவில் செந்தமிழ்ச் செல்வி பண்டிதை சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி 'சேக்கிழார் கண்ட பெண்ணரசி' என்னும் பொருள் பற்றியும் பண்டிதர் செ சிவப்பிரகாசம் 'சேக்கிழார் செந்தமிழ்' என்னும் பொருள் பற்றியும் உரைநிகழ்த்துவர் அன்று காலை 6-30 மணிக்கு நாட்டின் நலன் கருதி ஆதீனகர்த்தர் நடாத்திய இடர்களையும் திருப்பதிக, கோளறு திருப்பதிகப் பஜனைப் பூர்த்திவிழாவும் நடைபெறும். ஆதீனத் திருமுறைப்பஜனைக்குழு மாணவ மாணவிகள் திருமுறை ஓதுவர். பகல் 10 மணிக்குச் சேக்கிழார் சுவாமிகளுக்கு விசேட பூஜை நடைபெறும் பிரமஸ்ரீ குகசர்மா, கொக்குவில் திரு. மார்க்கண்டு குழுவினரின் புராணபடன நிகழ்ச்சியும் இடம்பெறும். மாலை 4 மணிக்கு செல்வி குணபூஷணி நாகலிங்கம் திருமுறைக் கச்சேரி நடத்துவார். சேக்கிழார் பெருமானின் திருவுருவம் நல்லூர்ச் சிவன்கோயிலுக்கு எழுந்தருளலும் திருவீதி உலாவருதலும் மாலை 6 மணிக்கு நடைபெறும்.

இன்று நடைபெறும் நம்பியாண்டார் நம்பி விழா ஞானப்பால் பூஜையுடன் ஆரம்பமாகும். நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவீதிகளைச் சுற்றிப் பஜனை நிகழும். காலை 10 மணிக்கு நம்பியாண்டார் நம்பியும், இராசராசசோழனும் திருமுறைகளைப் பெற உதவிய திருவருளை நினைந்து விநாயகருக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேகம் நடைபெறும். அன்று நண்பகல் பகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

.....

## ஜீப்பைக் கடத்தும் முயற்சி தோல்வி

கேகாலை வியாழன் பயங்கரவாதிகள் ஜீப் வண்டி ஒன்றைக் களவாடிச் செல்ல முயன்றபோது ஒரு குடிமகனைக்கொன்றுவிட்டுத் தலைமறைவாகிவிட்டனர்.

குருநாகல் மாவட்டத்தில் ஓரிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜீப் வண்டி ஒன்றைக் களவாடிச் செல்வதற்காக முயன்றபோது ஜீப்வண்டியின் சாவியைக் கண்டுபிடிப்பதில் பயங்கரவாதிகள் தோல்விகண்டனர். ஜீப் வண்டி நிறுத்தப்பட்டிருந்த இடத்தின் முன்னால் குடியிருந்த குடிமகன் ஒருவரைக் கொன்றுவிட்டு ஓடிவிட்டனராம். இந்தப் பயங்கரவாதிகள் விலபத்துக்காடுகளில் ஒளிந்துள்ளனர் என்றும் இவர்களுடைய உணவு நீண்ட நாட்களுக்குப் போதாமையால் விரைவில்சரணடைவார்கள் என்றும் அரசாங்கப் பாதுகாப்புப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பயங்கரவாதிகளின் தலைவன் ஒருவன் பலகாயங்களுடன் இன்று சரணடைந்துள்ளதாக மேற்படி அதிகாரி தெரிவித்தார். தலைவனிடம் அப்போது 600 ரூபா இருந்ததாகவும் கூறப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் இன்றுமேலும் ஏழு ஆண்களும் பன்னிரண்டு பெண்களும் சரணடைந்தனர். மொனறாகலையிலும் பல பயங்கரவாதிகள் சரணடைந்துள்ளனர்.

## புதிய இணைப்புக்குழு

காலி, வியாழன் உதவி நீதி அமைச்சர் திரு. இரத்தினசிறி விக்கிரமநாயக்கா புதிய இணைப்புக் குழுக்களை நியமித்துள்ளனர். இதன்படி காலி மாவட்டத்திலுள்ள அக்மீமன, வந்துரம்ப, உடுகம, பொல்பகொட, கொனபினுவெல, மீட்டியகொட, அம்பான, பினிக்கலம் போப்பே ஆகிய கிராமசபை வட்டாரங்களுக்குட்பட்ட பகுதிகளும் தொடாரிந்து நகரசபைக்குட்பட்ட வட்டாரப் பகுதிகளிலும் புதிய இணைப்புக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பிரதேச அமைப்பாளர் திரு கு நடராசன் மேற்படி சங்கத்தின் வட. பிரதேச அமைப்பாளர் திரு எஸ். ஆர் சரவணபவான், திரு. எம் பி கமீட், திரு றகீம் ஆகியோர் இக் கூட்டத்தில் உரையாற்றினர்.

## வயோதிபர் மரணம்

புதுக்குடியிருப்பு வியாழன் இப்பகுதியில் பிச்சை எடுத்துத் திரிந்த வயோதிபர் ஒருவர் புதுக்குடியிருப்பு இரணைப்பாலை றோட்டில் இறந்துகிடக்கக் காணப்பட்டார். பொதுமக்களால் முல்லைத்தீவுப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிசாரின் உதவியுடன் மரணவிசாரணை அதிகாரி சிலரை விசாரணை செய்து பின்பு வலியினால் ஏற்பட்ட [illegible] புதுக்குடியிருப்பு [illegible] வைப்பட்டது.

—

## உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளர்

புதுக்குடியிருப்பு, திங்கள் புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளராக க. சி. கந்தையா நியமிக்கப்பட்டுள்ளார்

இவர் இப்பகுதி திருமணப் பிறப்பு, இறப்பு பதிவாளருமாவார்

## ஆடம்பரமில்லை

புதுக்குடியிருப்பு, வியா. புதுக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பொங்கல் இம்முறை ஆடம்பரமாக நடைபெறவில்லை பகல் பூசையுடன் கோவிலுக்கு சென்றவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## நாடு நலம் ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வரையும் இணைந்து காண்பதற்கும் பொல்லாப்பிள்ளையாராகிய தும்பிமுகனின் அருள்பெற்ற நம்பியாண்டார்நம்பி வாழ்வும்வாக்கும் திருநாளும் துணைபுரிகின்றன.

வாழ்க நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார்பெருமான் திருவடிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையங்கம் பற்றி ஓர் அறிவித்தல்

கொழும்பிலுள்ள தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதியைப்பெற்றே ஆசிரியத் தலையங்கங்கள் பிரசுரிக்கப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்புக்கு அனுப்பி அனுமதிபெற்று அவற்றைப்பிரசுரிப்பதற்குள் அது காலங் கடந்த விஷயமாகிவிடும். எனவே சில தினங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாதென்பதை வாசகநேயர்கள் கவனத்தில் கொள்வார்களாக.

—ஆசிரியர்.

## இலங்கையில் போட்டி

கோட்டை வியாழன்

இவ்வாண்டுசெப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் இலங்கை - இந்திய சரசந்தாட்டப் போட்டிகளை கொழும்பில் நடத்துவதென இலங்கைச் சரசந்தாட்டக் கழகம் முடிவு செய்துள்ளது.

சென்ற வருடம் இப் போட்டி இந்தியாவில் நடைபெற்றது. மேலும் இது பற்றி இக்கழகத்தின் செயலாளர் இந்தியசரசந்தாட்ட சம்மேளனத்திடம் தெரிவித்துள்ளதாகவும் நம்பப்படுகிறது.

## படகோட்டப் போட்டி

கோட்டை புதன்

இந்தியாவில் உள்ள பூனா நகரில் ஆனி மாதம் 14-ம் திகதி தொடக்கம் 20-ம் திகதி வரை தெற்கு ஆசிய படகு ஓட்டப் போட்டி நடைபெறவிருக்கிறது.

முதன்முதலாக திருக்கோணமலையில்நிகழ்ந்த இப்போட்டி சென்ற வருடமே ஆரம்பிக்கப்பட்டது. இதில் இலங்கைப் படகு ஓட்டக் கோஷ்டியே வெற்றிபெற்றது. இவ்வருடமும் இப் போட்டியில் பங்குபற்றுவதற்கான அனுமதியை விளையாட்டுத்துறை அமைச்சிடம் இலங்கைப் படகு ஓட்டக் கழகம் கோரியுள்ளதாகவும் அறியவந்துள்ளது.

## பெரியவை எவை?

நிலம், மலை, கடல் ஆகிய மூன்றிலும் பார்க்கப் பெரியவை யாவை?

அநபாயசோழ அரசன் இந்தக் கேள்வியைக் கேட்டான்.

அரண்மனைப் புலவர் எவரும் இதற்கு விடை கூறமுடியவில்லை?

''விடை தருவார் உளரேற்போதருக'' என்று பறை சாற்றுவித்தான்.

இதையறிந்த சேக்கிழார்பெருமான் அவனது கேள்விகளுக்கு விடையாக மூன்று திருக்குறள் பாக்களை எழுதி அனுப்பிவைத்தார்.

### நிலத்தைவிடப் பெரிது—

''காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது''

### மலையை விட—

''நிலையிற்றிரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது''

### கடலை விட—

''பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது''

## வடபகுதி கல்லூரி அதிபர்கள் பலர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அநேகமான வடமாகாண கல்லூரி அதிபர்கள் ஜூன் மாதம் முதல் திகதிதொடக்கம் இடமாற்றம் செய்யப்படவிருக்கின்றனர். இடமாற்றத்தில் முதலாவது பட்டியலில் இடம் பெற்றோர் விபரம் வருமாறு:

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபர் திரு. சிவஞானம் வட்டுக்கோட்டை விக்ரோறியாக் கல்லூரி அதிபராகவும், விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. சிவசுப்பிரமணியம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும், மகாஜனக் கல்லூரி தற்காலிக அதிபர் திரு மா. மகாதேவா கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரிக்கும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் திரு ஈ கே சண்முகநாதன்யாழ் மத்திய கல்லூரிக்கும், யாழ் மத்திய கல்லூரி அதிபர் திரு. ஈ. சபாலிங்கம் யாழ். இந்துக் கல்லூரிக்கும், காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர் திரு பி. எஸ். குமாரசாமி கொக்குவில்இந்துக்கல்லூரிக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

காரைநகர் இந்துக்கல்லூரி துணை அதிபர் திரு. நடராசா காரைநகர்இந்துக் கல்லூரி அதிபராக கடமையாற்றுவார். வேலணை மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு அம்பரட்ணம் வனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்கு அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

## இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று முறிகண்டியில் கவிஞர் வி. கந்தவனத்தினால் எழுதப்பட்ட 'முறிகண்டி பத்து' என்னும் பக்திப் பாடல்கள் வெளியிடப்படுகிறது.

முறிகண்டியில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமான்மீது அவரைப் புகழ்ந்து இப்பாடல்கள் பாடப்பட்டவையாகும்.

## ஐவருக்கு தடுப்புக்காவல்

காலி, வியாழன்

வீரப்பன பகுதியைச் சேர்ந்த ஜினதாச விதானபத்திரான என்பவரின் வீட்டில் 8000 ரூபா பெறுமதியான நகைகளையும் பணத்தையும் திருடியதாக சந்தேகத்தின் பேரில் ஐவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். கே கே ஹன்டி, ஜே சந்திரதாசா, எச் ஜி செமி, எச். ஜனிஸ், என் எச் குலசிறி ஆகிய இவ் ஐவரும் உடுகம மாவட்ட நீதிபதியினால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## பட்னு இனிமேல் பாடலிபுரம்

புதுடில்லி, மே 27

பீகார் மாநிலத்தின் தலைப்பட்டினமான பட்னு இனிமேல் பாடலிபுரம் என அழைக்கப்படும். இம் முடிவை பீகார் அமைச்சரவை எடுத்துள்ளது.

## யாருடைய கூப்பன்?

ஸ்ரான்லி றோட்டிலுள்ள கே. உடையார் என்பவரால் பெரியகடை வீதியில் மூன்று கூப்பன்கள் கண்டெடுக்கப்பட்டு ''ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உடையவர்கள் காரியாலய நேரத்தில் வந்து தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## வாலிபர் கைது

காலி, வியாழன்

பயங்கர வாதிகளுடன் தொடர்புகொண்டு புரட்சிச் செயல்களில் ஈடுபட்டதாகக் கருதப்பட்ட கே. வி. பி. சமதபால எனும் இளைஞன் காலி மாவட்ட மேலதிக நீதவான் திரு. லக்ஸ்மன் வீரசேகராவினால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் ரகசிய பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டார்.

## ''லங்காராணி'' வருகிறுள்

கோட்டை, வியா

முதன்முதலாக இலங்கை வாங்கிய சரக்குக் கப்பலான 'லங்காராணி' ஆனி மாதம் 6-ம் திகதி கொழும்புத் துறைமுகத்துக்கு வருகிறது.

இக் கப்பலை கடந்த ஜனவரி மாதம் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா சிங்கப்பூரில் வைத்துக் கையேற்றார். இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்தினால் இக் கப்பல் வாங்கப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மன் ஹம்பேர்க்துறைமுகத்திலிருந்து கொழும்புத் துறைமுகத்திற்கு இக் கப்பல் வருவதையிட்டு விழா ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் [illegible] 28-ம் [illegible]

பயங்கரவாத இயக்கத்துக்கு

## பின்னணியில் உள்ளவரின் பெயர்களை வெளியிடுக

### செனட்டில் திருச்செல்வம்

கோட்டை, வியாழன்

பயங்கரவாத இயக்கம் அரசியலிலிருந்து வெளியே தள்ளப்பட்டவர்களால் உருவாக்கப்பட்டதெனக் கூறி மக்கள் கண்ணில் மண்ணைத் தூவ அரசாங்கம் முயற்சி செய்யக்கூடாது இந்த இயக்கத்துக்கு பின்னணியில் உள்ளவர்களின் பெயர்களை அரசு வெளியிட வேண்டும்' செனட் சபையில் நேற்று செனட்டர் எம். திருச்செல்வம். பேசும் போது. மேற்கண்டவாறு கூறினார்

அவர் தொடர்ந்து கூறியதாவது: எனக்கு கிடைத்த தகவல்களின்படி உள்நாட்டு வாலிபர்கள் ஒருபுறமிருக்க வெளிநாட்டு தொடர்பும் இந்தப்பயங்கரவாத இயக்கத்திற்கு பொறுப்பாயிருந்துள்ளது. நான் இதற்குமுன் கூறியபோல் ஏப்ரல் 7-ம் திகதி சீனக்கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்திற்கு வெளியில் காணப்பட்டது.

ஆயுதங்களுடன் கூடிய அக்கப்பல், இலங்கை கடற் பிராந்தியத்திற்குள் சென்றதாகவும் அரசாங்கம் அதனை தடுப்பதற்குமுன் திடீரென அக்கப்பல்சென்றுவிட்டதாகவும் எனக்கு கிடைத்த தகவலிலிருந்து தெரிகிறது.

சிநேகபூர்வமான நாட்டிற்கு எதிராக, செனட்டர் விடுக்கும் அறிக்கை பற்றி அவரே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என செனட்சபை தலைவர் திரு. ஏ இரத்னாயக்கா தெரிவித்தபோது தான் இந்த அறிக்கை சம்பந்தமாக முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதாக செனட்டர் திருச்செல்வம் தெரிவித்தார்.

தென் கிழக்கு ஆசியாவில் பயங்கரவாத இயக்கங்களுக்கு ஆதரவளிக்கப் போவதாக சீனு வெளியிட்ட தகவலுடன் தான் தெரிவித்த இந்த சம்பவம் தொடர்புடையதாக செனட்டர் திருச்செல்வம் மேலும் தெரிவித்தார்.

## மற்றொரு தலைவர் கைதானுர்

கோட்டை, வியாழன்

கொழும்பு மாவட்ட பயங்கரவாதிகள் தலைவரான 'லக்கி மாத்தயா' என்று அழைக்கப்படுபவர் கைதானுர். கொழும்பு மாவட்ட பொலிஸ் நிலையங்களைத் தாக்குவதற்கு இவர் பொறுப்பாக இருந்தார்.

இரத்மலானையிலுள்ள வீடொன்றில் வைத்து இவர் மகரகம பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

## உற்சவம்

சுழிபுரம், வெள்ளி

இன்று பகல் சுழிபுரம் பறுளாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் கொடியேற்ற உற்சவம் நடைபெறும் காலை, மாலை நேரங்களில் திருவிழா தொடர்ந்து நடைபெற்று ஜூன் மாதம் 7ம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### என்ஜினியர் இரத்தினசிங்கம்

மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், உமையாள் [பல்கலைக்கழகம், கொழும்பு], சிவாஜி ஆகியோரின் அருமைத் தந்தையும், மயில்வாகனம், தம்பிராசா, நடராஜா, திருமதி எஸ். சின்னத்துரை, திருமதி ஆர். விநாயகமூர்த்தி(அராலிதெற்கு, வட்டுக்கோட்டை) ஆகியோரின் சகோதரரும், வட்டுக்கோட்டை அராலி வடக்கு கே. சுப்பிரமணியம் தம்பதிகளின் மருமகனும், டாக்டர் எஸ். சிவசிதம்பரம் (லண்டன்), டாக்டர் எஸ். சிவப்பிரகாசம் (ஜமெய்க்கா), யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரின்டென்ட் ஆர். சுந்தரலிங்கத்தின் மனைவி யசோ, புறூனி எம். குமாரசாமியின் மனைவி உஷா ஆகியோரின் மைத்துனருமான கொழும்பு புகையிரதஇலாகா சுப்பிரின்டனும், என்ஜினியருமாகிய ஆர். இரத்தினசிங்கம் காலமானுர். அன்னாரது பூதவுடல் யாழ்ப்பாணம் கோவில்வீதி 69-ம் இலக்க அவரது இல்லத்திலிருந்து 29-ந் திகதி சனிக்கிழமை காலை எட்டு மணிக்கு தகனக்கிரியைக்காக கல்லூண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 2818

## மரண அறிவித்தல்

### கே. எஸ். எம். கந்தையா

ஸ்ரீமத் மகாதேவா சுவாமியார் அவர்களின் சிஷ்யரும் யாழ்ப்பாணம் சிவன் ஸ்ரோர் உரிமையாளரும் தின்னவேலி காரைநகரில் வசித்தவரும் செல்லம்மாவின் அருமைக் கணவரும், இராமானந்தசிவம், இளோசிவா ஸ்தாபனம், கிருஷ்ணானந்தசிவம்-மிருக வைத்தியர் பேராதனைப் பல்கலைக் கழகம், செல்வி யோகேஸ்வரி, மகாதேவசிவம் ஆகியோருடைய தந்தையாருமாகிய சாமி கந்தையா 27-5-71 வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார். அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக 28-5-71 மாலை 3 மணிக்கு கோம்பையன் மணலுக்கு எடுத்துச் செல்லப்படும். 3138

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org